தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 12, ஆங்கீரச-திருவள்ளுவர் ஆண்டு 2023.

1992, ஏப்ரல் 24, வெள்ளிக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரியது இல்.''

தமக்குச் சிறப்பு வேண்டுவோர் பொருளை ஈட்ட வேண்டும். பகைவர்களின் செருக்கை அழிக்கும் படைக்கலம் அப் பொருளைப்போல கூர்மை உடையது வேறொன்றும் இல்லை.

1. இரங்கல் குறிப்பு

திரைப்பட இயக்குநர்—தயாரிப்பாளர் திரு. சத்தியஜித்ரேயின் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தியத் திரைப்படத் துறைக்கு ஈடு இணையற்ற புகழ் சேர்த்தவரும், அகில உலக அரங்கில் போட்டியிடத்தக்கப் பல்வேறு சிறந்த அம்சங்களைக் கொண்ட திரைப்படங்களைத் தயாரித்து நாட்டுக்கு வழங்கிய வரும், தரமான திரைப்படங்களைத் தயாரிப்பதில் அவருக்கு இணை அவர்தான் என்று கூறிடத்தக்க வகையில் தலை நிமிர்ந்த தன்மையோடு திகழ்ந்தவருமான இந்தியத் திரைப்படத் துறை புகழ் பெற்ற இயக்குநர் திருமிகு சத்தியஜித்ரே நேற்றையதினம் மறைவு எய்திய செய்தியைப் பேரவைக்கு அறிவிக்கப் பெரிதும் வருந்துகின்றேன்.

அத்தகைய ஒப்பாரும் மிக்காரும் அற்ற புகழ் மிக்கவரான சத்தியஜித்ரேயின் மறைவு குறித்து இப்பேரவை தன்னுடைய ஆழ்ந்த இரங்கலையும், அவரை இழந்து தவிக்கும் அவருடைய குடும்பத்தாருக்கும், அவர் ஈடுபாடு கொண்டிருந்த துறையில் அவரை இழந்து அத்துறையே இன்றைக்கு இருள்மயமாகக் காட்சி அளிக்கிறதே என்று ஏங்கிடும் அளவிற்குத் திகழ்கிற அத்துறையினருக்கும் இப்பேரவையின் சார்பில் நம்முடைய ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்ள வேண்டும் என்னும் தீர்மானத்தை முன் வைத்து, மறைந்த அப்பெருந்தகைக்குப் பேரவையின் சார்பில் இரங்கல் தெரிவிக்கிற வகையில் இரண்டு நிமிடங்கள் உறுப்பினர்கள் எழுந்து அமைதி காக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)